மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 50

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

திருவாளர்கள் ரவி அருணன், பொன். விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றவனாகக் கருதப்பெற்றன.

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

“ மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.2,26,18,000 -க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுதினம் (7—4—1989) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

42. நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 13—4—1987 ஆம் நாளிட்ட SRO ஏ-97(a)/87 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட விதிகளை ரத்து செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 27—2—1998 ஆம் நாளிட்ட 136 ஆம் எண். அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

43. அண்ணா மாவட்டம், நத்தம் தாலூகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 15—11—1988 ஆம் நாளிட்ட 701 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS